தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஅ	திருவள்ளுவர் யாண்டு உ௰௬ ஆனந்த, தை (1975 — சனவரி — பிப்ரவரி)	மலர் ௰

புரட்சிக் கவிஞரின் 'காதல்'

இராம. சுப்பிரமணியன், எம். ஏ., பி. ஜி. எல்., பி லிப். எஸ்ஸி,
4-B, தீத்தாரப்ப முதலிதெரு. திருவல்லிக்கேணி. சென்னை - 5

அகப்பொருள் என்பது. மக்களது உள்ளத்து உணர்ச்சி யாகிய இன்ப அன்பின் வயப்பட்ட குடும்ப வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறுவது ஆகும். இதனை எடுத்துரைக்கும்போது; ஒருவனுக்கும். ஒருத்திக்கும் இடையே ஏற்படும் அன்பும், அது பற்றிய உணர்ச்சிகளும், நிகழ்ச்சிகளும் விளக்கிக் கூறப்படும் இன்ப நுகர்ச்சி, அதனை நுகர்ந்த ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரின் உள்ளங்களுக்கு மட்டுமே புலனாதலால். இது அகம் எனப் பெயர் பெற்றது. இவ்வின்ப நுகர்ச்சி பிறர்க்குப் புலனாகாமல் மறைக்கத்தக்கது ஆதலால், இது அகம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். புறப்பொருள் என்பது, அறம் செய்தலும். பொருள் ஈட்டுதலும். போர் புரிதலும் முதலிய சமுதாய வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறுவது. இது பிறர்க்குப் புலனாதலின், புறம் எனப் பெயர் பெற்றது இது பற்றிய உணர்ச்சி, பிறர்க்குக் கூறத்தக்கது ஆதலால் இது புறம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

புலவர்களால் பாடி முடிக்க இயலாத பொருளாக காதல் திகழ்ந்து உள்ளது தரம் உயர்ந்த இலக்கியத்தில் காதற் கருப்பொருள்கள் மிகுதியாக உள்ளன சங்கப் புலவர்கள் மானிடர் காதல் பற்றியே பாடுகின்றனர். காதற் கருப்பொருள் நம் மனதைப் பெரிதும் ஈர்க்கிறது. ஏனெனில், அது உயிருடன் ஆழக் கலந்துவிட்ட ஒன்று

காதலின் சிறப்பை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் உணர்ந்துதான் வருகின்றார்கள். எனினும் அதன் பெருமையை எல்லோராலும் கண்டும் கொண்டும் மகிழ முடியவில்லை. ஒரு சிலரே அதனை வாழ்வாக்கி மகிழமுடிகிறது.

மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார். (திரு 1289)

என்று இந்த நிலையை விளக்குகிறது வள்ளுவம். நிலைமை இவ்வாறிருப்பதனால், காதலின் புகழைப் பாடிப்பாடி மக்களுக்கு அதனை நினைவூட்ட வேண்டியதாக இருக்கிறது.

காதல் என்பது காதுக்கினிய சொல்; கருத்துக்கினிய பொருள் காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு; காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை.

கண்ணன் பாட்டுக்குப் பின் ஒரு காதல் பாட்டு எடுபடுமா? என்னும் வியப்புக் குறியை நீக்கி,

காதல் அடைதல் உயிரியற்கை — அது
கட்டில் அகப்படும் தன்மையதோ

என்று கணீர்க் குரலெடுத்துக் காதல் நாதவெள்ளம் பரப்பிய பெருமகன் பாரதிதாசனார். தமிழ் என்றால் எவ்வளவு கனிகிறதோ. அதற்குப் பெரும்பாலும் இணையாகக் கனிகிறது இவர் நெஞ்சம், காதல் என்றாலும்! எனவே காதல் சொல்லும் இவர் கவிதைகளின் காதலின் மேன்மை, வளமை. கனிவு, குழைவு எல்லாம் ஒருங்கிருந்து உள்ளம் கனிவிப்பதை உணர் கிறோம்.

காதலைப் பலவாறாகக் கவிஞர் பெருமக்கள் போற்றி விளக்கம் தருகின்றனர். நாம் பொதுநலத் தாகத்தோடு வாழுகின்ற காலமல்லவா இது? ஆதலால் கவிஞர் காணும் காதலிலும் அந்த ஒளி சிரிக்கிறது.

உலகுக்கு அழகை
ஊட்டும் ஓர்
காதற் கலவை நிகழ்ச்சி.

காதல் கவிஞர்கட்கும் பிற கலைஞர்கட்கும் உவப்பான ஒன்று. 'காதல் இல்லாத இடம் சூனியமாம்!'' என்னும் கவிஞர்கள் காதலின் புகழ் பாடி இயல் தெரிவித்தே வருகின்றனர்.

காதல் இருவர் தம்முள்
கருத்தொரு மித்தார் பின்னர்
சாதலால் பிரிவ தன்றித்
தாம்பிரிந் திடுவ துண்டோ?

என்று குறிஞ்சி அரசியின் மூலம் வினு விடுகின்ருர் கவிஞர்,

கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (திரு, 1100)

என்ற திருக்குறளின் இலக்கியமாக 'எதிர்பாராத முத்தத்தில்' அமைந்துள்ள ஒரு காட்சியினைப் புரட்சிக் கவிஞர் காட்டுகின்ருர். பூங்கோதை தண்ணீர்க் குடத்துடன் வருகிருள்: பொன்முடி அவன் எதிரே வருகின்ருன். இளமை முதலே ஒன்ருகப் பழகி வந்தவர்கள்; இடையில் குடும்பத்தில் ஏற்பட்ட பிளவால் பிரிந்தவர்கள் அவர்கள் இருவரும் கூடுகின்ற காட்சி இதோ:

'என்விழிகள் அவ்விழியைச் சந்திக்குங்கால்
என்ன விதம் நடப்ப'தென யோசிப்பாள் பெண்;
ஒன்றுமே தோன்றவில்லை; நிமிர்ந்தே அன்னேன்
ஒளிமுகத்தைப் பார்த்திடுவாள்; குனிந்து கொள்வாள்!
சின்னவிழி ஒளிபெருகும்! இதழ் சிரிக்கும்!
திருத்தமுள்ள ஆடைதனைத் திருத்திக்கொள்வாள்!

இதற்குப் பிறகுதான். காதல் என்னும் பேரின்ப நிகழ்ச்சி ஏற்படுகிறது. அதைப் புரட்சிக் கவிஞர் விரித்துரைக்கும் அழகில் நாம் காணலாம்:

"எதிர்ப்பட்டார்! அவன் பார்த்தான்; அவளும் பார்த்தாள்
இருமுகமும் வரிவடிவு கலங்கிப், பின்னர்,
முதல் இருந்த நிலைக்குவர. இதழ் சிலிர்க்க,
முல்லைதனைக் காட்டி, உடன்மூடி. மிக்க
அதிகரித்த ஒளிவந்து முகம் அளாவ,
அடிமூச்சுக் குரலாலே ஒரே நேரத்தில்
அதிசயத்தைக் காதலொடு கலந்த பாங்கில்
"அத்தான்" "பூங்கோதை" என்ருர்!
நின்ருர் அங்கே
வையம் சிலிர்த்தது.

காதல் காட்சிகள் எத்தனையோ காண்கின்றோம் ஏற்றப் பாட்டுக் கூறுகின்ற காதல், கிராமிய இயற்கைச் சூழ்நிலையில் கவிஞர் சித்தரிக்கின்றார். அவன் ஏற்றம் இறைக்கின்றான்; அவள் அருகில் நிற்கிறாள். மாமன் மகளும், மாமி மகனும்தான்; அதற்காக அவள் கருத்து அறியாமல் கட்டிக்கொள்ளலாமா? கேட்கிறான்:

கொண்டையிலே பூவும் — உன்
கோணை நெடுவாக்கும்
தண்டையிலே பாட்டும் — உன்
தாளடியில் கூத்தும்
கண்டவுடன் காதல் — நான்
கொண்டேனே உன்மீதில்!

என்ற அடிகள், பழகிப்போன வருணனையாக இருந்தாலும் ஏற்றப்பாட்டின் எளிமையில் அது புதுமை காட்டுகின்றது

'பாண்டியன் பரிசு' அன்னமும் வேலனும் அரண்மனையில் நுழைகிறார்கள். அவள் விரும்பிய அன்பு பற்றிய பேச்சும் நிகழ்ச்சியும் பிள்ளை நிலை என்ற கனிச்சாறும் பேரிளமை என்னும் கருப்பஞ்சாறும் (இங்குப் பெருமையுடைய இளமை) கொள்ளை படப்பெய்துவைத்த கொப்பரையாம் 'இளமை' அதனை நாள் என்னும் பூனை நக்க உயிர் என்பார் பார்த்திருக்கலாமா என்கிறாள். நாளது சின்மையும் இளமையதருமையும் நவில்கிறாள் அன்னம். தொல்காப்பியம் உணர்த்துகின்றாள்!

அள்ளையிலே காதல் அதை அருந்தல் இன்பம்
அகமொன்றி மேல்நடத்தல் அறமாம் என்றாள்

அவன் களவு — கற்புக்கிலக்கணம் இரண்டே வரிகளில்! ஈதல் அறம் 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்ற ஔவைக் கற்பனை இங்கு கொண்டு அக மகிழத்தக்கது.

காதலுக்குத் தேவை இளமை, அன்பு, இன்பம் இவைகளைப் 'பிசிராந்தையார்' என்ற நாடகத்தில், தோட்டத்துப் பாட்டின் வாயிலாகக் கவிஞர் காதலின் இலக்கணத்திற்கு விளக்கம் கூறுகின்றார்.

மாருத இளமை வேண்டும்
வற்ருத அன்பு வேண்டும்
... .
குன்ருத ஆசை வேண்டும்
கொள்ளாத இன்பம் வேண்டும்
.. ..

காதலர்களின் விளையாட்டுக்களையெல்லாம் உடையப்பனின் மனைவி ஓடைப்பூவின் வாயிலாகக் காட்டுகின்ருர் கவிஞர்.

கையால் அணைப்பான் — என்
கன்னத்தைக் கடிப்பான் — அவன்
மெய்யாய் உழைப்பான் — எனை
விட்டுப் பிரியான்!

மேலும் இந்த நான்கு அடிகளிலே அவளுடைய உள்ளத்தின் உணர்ச்சிகளைக் கற்போரும் உணரும்படி உரைக்கின்ருர் கவிஞர்.

'குடும்ப விளக்கு' வேடப்பனின் காதலையும், நகைமுத்து வின் காதலையும் குறிப்பிட்டுக் காடுட்கின்ருர் கவிஞர்.

அடுக்கிதழில் நகைதோன்றும் போதில் எல்லாம்
அறங்காக்கும் அவள்நெஞ்சம் வெளியில் தோன்றும்!
மடுப்புனலைப் புன்செய்உழ வன்பார்த் தல்போல்
மங்கையனை நோக்குகின்ருள் எனினும், வாழ்வில்
அடுத்திருக்கும் கருத்துண்டோ! யாதோ! ஐயோ!

நகைமுத்துவின் வாயிலாகப் பிரிவினை அமைத்துக் காட்டு கின்ருர் கவிஞர்.

நூறுமுறை அவள்பார்த்தாள், அவனை! ஆளன்
நூறுமுறை நோக்கினுள். இனிது பெற்ற
பேறுதனை இழப்பாள்போல், குறட்டி னின்று,
பெயர்த்தஅடி கீழ்ப்படியில் வைக்கு முன்னர்
ஆறுமுறை அவள்பார்த்தாள், அவனும் பார்த்தான்
அவள்வண்டிப் படிமிதித்தாள் திரும்பிப் பார்த்தாள்
ஏறிவிட்டாள்! ஏறிவிட்டார் விருந்தி னர்கள்!
இனிதாக வாழ்த்துரைகள் மாற்றிக் கொண்டார்.

முதியோர் காதல் பகுதியில் மணவழகர் வாழ்வாவது அவள் மேல் வைத்த காதல் என்று கூறுகின்றார் கவிஞர், 'முதுமையில் காதல்' என்பது இலக்கிய வழக்கில் வழங்காத ஒன்றைப், புது வழக்காகப் புகுத்தியுள்ள பெருமை புரட்சிக் கவிஞர் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

வாழாது வாழ்ந்த மூத்த
மணவடி குள்ளம் இஃதே
ஆழாழிப் புனல் அசைவை
ஆர்ப்பினை எண்ணி டாது
வீழுற அதனில் வீழ்த்தும்
இருப்பாணி போல்அ வன்மேல்
காமுற மனத்தில் வைத்த
காதலால் வாழு கின்றார்.

தள்ளாத கிழப் பருவத்திலும் காதல் இன்பம் எய்தல் உண்டு என்பதை மணவழகர் கூறுகின்ற முறை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது

அருவியெலாம் தென்பாங்கு பாடுகின்ற பொதிகை
அசைதென்றல் குளிர்விசும் சந்தனச்சோ லைக்குள்
திரிகின்ற சோடிமயில் யாமிரண்டு பேரும்!
தெவிட்டாது காதல்நுகர் செந்தேன்சிட் டுசகள்
பெருந்தென்னங் கீற்றினிலே இருந்தாடும் கிளிகள்,

காதல் வாழ்விலே மகிழ்ந்தோம்; கவலைகள் அனைத்தும் தவிர்த்தோம் என்று கவிஞர் 'காதல் வாழ்விலே' என்ற தலைப்பில் — தேனருவிப் பாடல்கள் தொகுதியில் கூறுகின்றார்.

காதல் வாழ்விலே மகிழ்ந்தோம்
கவலை தவிர்த்தோம்.

எழுங்காதல் பறித்தார்

தென்னை மரத்திலே சிட்டு; அது புன்னை மரத்திலே தாவுகின்றது — ஆண் சிட்டும் பெண் சிட்டும் ஒன்று ஆகின்றன.

அணில் — காதல் கடலில் மூழ்குகின்றது.
முல்லை மலருக்குக் காதல் முகிழ்க்கிறது,
ஆனால்,
ஆனால்,

பாழாய்ப்போன மனிதனுக்கோ காதல் — முழுக்காதல் இல்லை; கலக்கமே மிஞ்சுகின்றது:

"மஞ்சம் திருத்தி — உடை
மாற்றி யணிந்தே — கொஞ்சம்
கொஞ்சிக் குலாவிட நாதன் வரும்படி
கோதை அழைக்கையிலே
மிஞ்சிய சோகம் — மித
மிஞ்சிய அச்சம் — என்
வஞ்சியும் பிள்ளையும் நான்இறந்தால் என்ன
வாதனை கொள்வாரோ!
நெஞ்சில் இவ்வாறு — நினைந்து
அங்கு உரைக்கின்றான்: — அடி
பஞ்சைப் பரம்பரை நாமடி பிள்ளைகள்
பற்பலர் ஏதுக் கென்பார்
கஞ்சி பறித்தார் — எழுங்
காதல் பறித்தார் — கெட்ட
வஞ்சகஞ் சேர்சின்ன மானிடச் சாதிக்கு
வாய்ந்த நிலை இதுவோ?

"கஞ்சி பறித்தார் எழுங்காதல் பறித்தார்" இந்த வரி புரட்சிக் கவிஞர் மனிதனிடத்தில் எத்துணை அன்பும் நம்பிக்கையும் கொண்டுள்ளார் என்பதைக் காட்டுகின்றது.

நோக்குபவை எல்லாம் அவையே போறல்

உடற்கூறுகளைக் கண்ணால் கண்டறிவதுபோல உள்ளக் கூறுகளை அறிய இயல்வதில்லை. உடலைவிட உள்ளம் நுண்மையானது. உடலுக்கு வடிவம் உண்டு; உள்ளத்திற்கு உருவம் இல்லை ஆனாலும் உள்ளத்தை. இன்னோர் உள்ளம் உணர்ந்து கொள்ளும். எல்லா உள்ளங்களும் மற்ற உள்ளங்களை மெய்ப்பாடுகளாலும். குறிப்புக்களாலும், பட்டறிவாலும் உணர்ந்து கொள்கின்றன. "நுண்ணியமென்பார் அளக்குங் கோல் காணுங்கால் 1" என வள்ளுவர் பெருந்தகை குறிக்கின்றார்.

ஒருவன் உள்ளத்தில் ஒரு கருத்து ஊன்றப்பெற்று நிறைந்து வளர்ந்து முழுமை பெறுமாயின், அந்த உள்ளத்தில்

1 திருக்குறள்: 710.

அந்தக் கருத்தைத் தவிர வேறு இடம்பெற இயலுவதில்லை. அவ்வாறு அந்தக் கருத்து வலுப்பெற்றபின் அவன் காணுகின்ற பொருள்கள் எல்லாம் அக்கருத்துப் பொருள்களாகவே அவன் கண்களுக்குக் காட்சியளிக்கின்றன. நோக்குகின்ற இடங்களில் எல்லாம் அவனுள்ளத்தில் ஊன்றி வளர்ந்து உருவான வடிவமே அவன் கண்ணுக்குத் தெரிகின்றது இந்த உள வியல்பை. "நோக்குபவை எல்லாம் அவையே போறல்" எனத் தொல்காப்பியர் குறித்துள்ளது கூர்ந்து கவனிக்கத் தக்கது [2]

உள்ளத்தில் நிறைந்த பொருள் - உள்ளத்தில் நிறைந்த காதலி - வெளியில் - புறத்தில் - எல்லா இடங்களிலும் அதே பொருளாக - அதே காதலியாக - காண்பதே நிறைவாகும். இந்தப் பழைய உளவியல் கொள்கை புரட்சிக் கவிஞரையும் ஈர்த்திருக்கிறது என்பது உண்மை,

'பாண்டியன் பரிசு" என்னுங் காப்பியத்தில் அன்னம் என்னும் தலைவியை வேலன் எனனும் தலைவன் காதலிக்கின்றான். கம்பனும் பாரதியும் பாவேந்தர் பாவிலே நெகிழ்கின்றனர். வேலன் கண்ட காட்சியைக் கவிஞன் சொற்களாலேயே இசைத்துச் சுவைப்போம்.

> "ஆடப்போம் புனலிலெலாம் அவளே. காற்றில்
> அசையப்போம் பொழிலிலெலாம் அவளே! கண்ணால்
> தேடப்போம் பொருளிலெலாம் அவளே, நேரில்
> தின்னப்போம் சுவையிலெலாம் அவளே, வண்டு
> பாடப்போம் மலரிலெலாம் அவளே! மேற்கில்
> படுகதிரில் அவள் வடிவே காண்பேன் என்று
> வாடக், கண் துயிலாமல் இருந்தான் வேலன்
> மலர்ந்திட்ட காலையிலும் அவளைக் கண்டான் [3] "

தொல்காப்பியர் நெறி - சங்க நெறி - பக்தி நெறி - காப்பிய நெறி பாவேந்தரால் வளர்த்து வாழ வைக்கப்பெற்றுள்ளமை எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது.

---

2 டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்: பாவேந்தர் நோக்கு, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு நிறைவு விழா மலர், பாவேந்தர் பாரதிதாசன் மன்றத்தார். கோயமுத்தூர், 1970.

3 பாண்டியன் பரிசு : பக் 145

"வீட்டினில் கூட்டுக்குள்ளே கிளியெனப் போட்டடைத்தார் கெடு நினைப்பு உடைய பெற்றோர்" என்று பாரதிதாசனார் பாடும்போது, பூங்கோதை இற்செறிக்கப்பட்டாள் என்ற அகத் துறையைக் காண்கின்றோம். [4]"

கைம்மையும் காதலும்

உலகில் பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் இயற்கை. அதுபோல் மங்கையை மணந்த கணவரும் இறந் தார். அவ்வாறு இறப்பதற்கு அவள் ஒரு குற்றமும் செய்ய வில்லை. அப்படி இருந்தும் கைம்மையை அவள்மேல் சுமத்து வது எங்ஙனம் பொருந்தும்?

எனைமணந்தார் இறந்தார் என்குற்றமல்ல
இறந்தவுடன் மங்கலநாண் நல்லாடைகள்
புனைமலர்குங் குமமணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?
எனையாளும் காதலோர் இலக்கியத்துக்
கிசைந்ததெனில் உயிரியற்கை நானென்செய்வேன்?
தனையடக்கிக் காதலினைத் தவிர்ந்து வாழும்
சகமிருந்தால் காட்டாயோ நிலவே நீதான்

—இது கவிஞர் படைப்பில் கடலில் வீழ்ந்து சாக இருக்கும் ஒரு கைம்மைப் பெண்ணின் முறையீடாகும்

இந்த நாட்டில் பல்லாயிரக் கணக்கான கைம்மைப் பெண் களின் சார்பில் முறைவேண்டும் கவிஞருடைய கருத்தின் திட்பத் தைக் காணுங்கள்! நாணும், அவர் உதவிய நல்லாடைகளும், மலரும், குங்குமமும் அணிகளும் அவருடன் போய்விட்டன. உண்மையிலேயே அவருடன் இவைகள் போகவேண்டியவை தாம் ஆனால், காதலுக்கு அடிப்படையாக அல்லது முதலாக நிற்கும் அழகிய உடலையும் உயிரையும் அவரளிக்கவில்லை காதலுக்கடிப்படையான உடலும் உயிரும் இருக்கும்போது காதல்செய்வது கூடாதென்று கைம்மையைப் பெண்கள்மீது மட்டும் சுமத்துவது பொருந்துமா? பெண்களோடு கூடிய இவ்வுலகைப் பல ஆண்டுகளாகப் பெற்று அறிந்த உலகைச் சூழ்ந்து நிற்கும் புனலே! நீங்கள்தாம் கூறுங்கள். இது முறையா? என்னை ஆளுங் காதல் தன்னையொத்த பிறிதொரு

4 டாக்டர் வ. சுப. மாணிக்கம் : தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962 பக் 319 - 320

ஆடவனின் காதலாம் இலக்கியத்திற்கு உடன்பட்டது என்றால் அது உயிரியற்கை. அதற்கு என்னைக் குறை கூறிக் குற்றம் சுமத்தல் எங்ஙனம்? இவ்வாறு கைம்மையால் தன்னடக்கம் கொண்டு காதல் செய்யாமல் வாழும் உயிரினங்களையுடைய பிறிதொரு உலகம் யாண்டேனும் உண்டா? அவ்வாறிருந்தால் விண்ணின்மீது ஒளிவீசித் திகழும் நிலவே! நீ அறிவாயல்லவா? அறிந்தால் காட்டு யானும் அடங்கி வாழ்கின்றேன். உயிரினங்கள் காதல் செய்வது இயற்கையல்லவா? இதனைக் கைம்மை கூறி மறுப்பது யாங்ஙனம்?

இளமைதந்தாய் உணர்வுதநதாய் இன்பங்காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைதேவி!
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட்டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மைகூறித்
தளைமீறி வலியில்லேன் அந்தோ!

என்று கைம்மைப் பெண்ணின் கூற்றாகக் கவிஞர் பாடுவது நம்முள்ளத்தை உருக்குகின்றது.

புரட்சிக் கவி

கவிஞர் வரைந்துள்ள புரட்சிக் கவி' என்னும் பகுதியில் அமுதவல்லியின் புறத்தோற்றப் பொலிவால் வியந்து உரை நிகழ்த்திய உதாரக் கவிஞன் உள்ளத்தைக் கவரும் நெறியில் உரை நிகழ்த்துவதையும் பழகுவதையும் காணலாம். திரையிட்டு மறைத்துப் பாடங் கற்பிக்கவைத்த சூழ்ச்சியை எண்ணி வெளியிட்ட உதாரனின் உரைகள் அவனுடைய உள்ளத்து வழிப் பிறந்த காதலைக் காட்டுவதாக உள்ளன. அவற்றைக் காண்போம்.

'காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம்போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?
பிறர்சூழ்ச்சிச் செந்தமிழையழிப்பதுண்டோ?
நேரிருத்தத தீர்ப்புரைத்துச் சிறையிற்போட்டால்
நிறைதொழிலா ளருணர்வு மறைந்துபோமோ?
சீரழகே! தீந்தமிழே! உன்னையென் கண்ணைத்
திரையிட்டு மறைத்தார்க ளென்று சொன்னான்"

காதலின் தோற்றம், காதலின் பல்வேறியல்புகள் யாவும் கவிஞர் கருத்தின் வழியும் பிற அறிஞர் கருத்தின் வழியும் ஒருவாறு கண்டோம்.

கழாரும் புகாரும்

பேராசிரியர்.

கோ. தெய்வநாயகம், எம். ஏ., பி. எசு. சி, டிப் - இன் - அக்ரி.

கழார் ; புகார் ; ஆம் இரண்டுமே புகார் நன்னாட்டில் காவிரியாற்றில் காணப்பெற்ற துறைகள் தாம். ஒன்று நீராடுதுறை, மற்றொன்று வணிகத்துறை. இவ்விரு துறைகளுந்தான் காவிரிப் படப்பை வளத்தின் அடையாளச் சின்னங்களாக அற்றை நாளில் திகழ்ந்தன.

மாபெரும் வணிகத்துறையாக அமைந்து அயனாட்டு வணிகப் பெருக்கிற்குக் களனாயமைந்து, சோழநாட்டினை, புகார் நகரத்தினை பயனறவறியா நிலையில் அளந்து கடையறியா செல்வ வளம் தலைமயங்கிய நிலையில் பொலிவுறச் செய்தது புகார்த்துறையாகும்.

சங்கம் மருவிய காலத்தினின்றும் பாக்கம் என்றும், மருவூர் என்றும், மருவூர்ப் பாக்கமென்றும் வழங்கப்பெற்ற ஆரங் கண்ணிச் சோழன் மூதூரில், காவிரியின் வடகரையில் அமைந்திருந்தது இப் புகார்த்துறையாம். இத்துறைக்கு முன்னராக அதாவது கிழக்குப் பகுதியில் கடலுக்கும் இத்துறைக்கும் இடையில் காவிரியாற்றில் மற்றோர் துறை இருந்திருக்கின்றது. இத்துறை சங்க காலத்திலும் சிலப்பதிகாரக் காலத்திலும் மிகச் சிறப்புடையதாக விளங்கியது. அத்துறையினை இலக்கியங்கள் ''கழாஅர்'' என்ற பெயரினதாக் குறிக்கின்றன.

'புகாஅர்' என்ற பெயர்ச்சொல் எவ்வாறு நில அடிப்படையில், அதாவது கடலிற் கலக்கின்ற, சோணாட்டிற்கு இன்றியமையாத யாறு புகுந்து ஓடுகின்ற பகுதியைக் குறித்து விளக்கி நிற்கின்றதோ அதுபோன்றே ''கழாஅர்'' என்ற பெயரும் நில வியற்கை அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இவ்விரு பெயர்களும் புகாஅர், கழாஅர் என்ற முறையில் உயிரளபெடைகளாகவே இலக்கியங்களில் பெரும்பான்மையாளப் பெற்றுள்ளன. ஆறு புக்கு ஓடும் இயல்பினை உடைய பகுதி புகார் என்று எவ்வாறு வழங்கப் பெற்றதோ அதுபோன்றே, கழர்ப் பகுதியாக, உப்பங்கழிகளையும். உவர் நிலங்களையும் உடைய நிலப்

பகுதி கழிசூழ்ந்த பகுதி என்ற முறையில் 'கழார்' என அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். கடற்கரையை ஒட்டிய நிலப்பகுதிகளில் உப்பங்கழிகளும் உவர் நிலமும் இருப்பதியல்பு. எனவே தான் புகார் நகரத்து அத்தகைய நிலப்பரப்பில் அமைந்த ஒரு நீர்த்துறையும் 'கழாஅர்' என்றே பெயரிடப்பெற்றது.

....''காவிரிப்
பலராடு பெருந்துறை''..............

(குறுந். 258)

என்ற தொடர்கள். இத்துறை புகார் நகர மக்கள் நீராடுவதற்கென அமைந்த தனித்த பெருந்துறையாகும் எனக் குறிக்கின்றன. இந்நீராடுதுறை மிகுதியான மருதமரங்களடர்ந்த நிலையில் விளங்கிற்றெனவும் அப்பாட்டல் விளக்குகின்றது. உப்பங்கழிப் பகுதியில் மருத மரங்களிருக்கமுடியுமா? என்றால் அது முடியும். இன்று அத்தகைய நிலங்களில் மருதமரங்கள் வளர்ந்து செழித்துக் காணப்படுகின்றன. மேலும் ''உரிப் பொருள் அல்லன மயங்கவும் பெறுமே என்ற தொல்காப்பிய நூற்பாகூட இதுபோன்ற கருத்துக்களால்தான் எழலாயிற்று. இத்திணை மயக்குற்ற காட்சியினை பொருநராற்றுப்படை மிகத் தெளிவாக எடுத்து விளக்கி நிற்கின்றது. எனவே இந்தத் துறையில் மருதமரப் பூக்களும ஏனைய பூக்களும் மிகுதியாக சொரியப்பெற்றிருக்கின்றது.

''பல்வேன் மத்தி கழார் முன்துறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய''

(அகம் 226)

என்ற தொடர்கள் இதற்கோர் விளக்கமாயமைவதுடன், கழாஅர்த்துறை, புகார்த்துறைக்கு முன்பாக கடலுக்கு மிக அருகாமையில் காவிரியாற்றிலிருந்தது என்பதனைக் ''கழாஅர் முன்துறை'' (அகம் 226, 376) என்ற தொடரால் விளக்கி நிற்கின்றன.

இத்துறையினின்றுந்தான் இந்திரனுக்கு நீராட்டுவான் வேண்டி ஆயிரத்தெட்டு அரசு தலைக்கொண்ட காவிரி நீர் பொற்குடத்து முகந்து செல்லப்பெற்றது என்பதனைத்

"தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி......
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி"
(சிலம்பு இ. வி. ஊ. கா, 164 — 168)

என்ற பகுதி விளக்குவதோடு இக்கழார்த்துறை பூக்களின் தாது செறிந்த நிலையில் விளங்கிற்றெனவும் முற்கூறிய கருத்தினைத் தெளிவுறுத்துகின்றது.

இக்கழாஅர்த் துறை மிகப்பெரிய துறையாக மட்டுமல்ல மிகுதியான ஆரவாரமுடைய நீர்ப்பெருக்கினை உடையதாகவும் மருத மரங்களடர்ந்த சோலைத் துறையாகவும் விளங்கிற்று என்பதனை

"மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிக்கதிர்க் கழனி கழாஅர் முன்துறை"
— (அகம் 376)

என்ற பாடல் விளக்குவதோடு, "கழார்" என்ற பெயருக்கு. கழனிகள் நிரம்பிய பகுதியாகலின் "கழார்" என்று பெயர் பெற்ற தென்ற பிறிதோர் பெயர்க் காரணத்தையும் எடுத்துப் புகலுவதாக அமைந்துள்ளது.

இத்துறையில் நீராடுவது என்பது எளிய ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நாளில் நீராடுவது என்பது சிறப்பானதாக சங்க காலத்திலேயே விளங்கி இருக்கின்றது. இந்த சிறப்பான "நீராடுதல்" என்ற விழா சங்க இலக்கியமாகிய அகநானூற்று, இருநூற்று இருபத்திரண்டாவது பாடலால் விளக்கம் பெறுகின்றன.

"கழார்ப் பெருந்துறை விழவின் ஆடும்"

என்பதனால் கழார்ப் பெருந்துறையில் 'நீராடுதல்' என்ற பெயரால் குறிக்கப்பெறும் விழா எது? என்ற ஐயமெழும்.

"விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதங் கொள்ளும் தலைநாட்போல"
(சிலம்பு — கடலாடு — 159)

என்ற வரிகள் மன்னனே நேரிற்போந்து மக்கள் நீராடுதலை யும். கடவுட் பூசனையையும் கண்டுகளிக்கும் நீராட்ட நாள், தண்பதங்கொள்ளும் தலைநாளாகும்; அதாவது புதுப்புனல் ஆற்றிலே வருகின்ற ஆடிப்பெருக்கு விழாவாகும் என்று குறிக் கின்றது. இந்த புதுப்புனல் மிகுதியிலே சிக்கித்தான் நீராடு தலிலே வல்லவனாகிய 'ஆட்டனத்தி, கடல் சேர்ந்து மருதி யால் காப்பாற்றப் பெற்றான்.

''சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தன'' (சிலம்பு - இ வி ஊ, கா 64) என்ற வரிகளால் இந்திர விழா கொண்டாடப் பெற்ற நிலையும், அதன் இறுதி நாளாகிய இருபத்தி எட்டாம் நாள் அன்று புகார் நாட்டு மக்களனைவரும் கடலாடி மகிழ்ந்தனர் என்று

''உருகெழு மூதூர் உவவுத்தலை வந்தென
பெருநீர்ப் போகும் இரியன் மாக்களோடு''
(சிலம்பு - கடலாடு 112)

என்ற பகுதி விளக்குகின்றது. இதில் பெருநீர்' என்பது கடலைக் குறிப்பதாக உரையாசிரியர் உரை கண்டுள்ளனர். ஆனால் இச்சொல் காவிரியாற்றையும் குறிக்கும்,

உவாமதி நாட்களில் இரவு நேரத்தில் கடலோதம் மிகுதி யாவதியற்கை அவ்வோதப் பெருக்கு பெருமலைகளாகக் காவிரி யாற்றினுட் புக்கு நீண்ட தூரம் சென்று நீர்ப்பெருக்கினை அதிகப்படுத்திப் பின் விடியற்கால நேரத்தில் கடலோதந் தாழ்ந்தமையினால் ஆற்றினின்றும் பெருவேகத்தோடு கடலிற் சென்று கலக்கும் , இக்காட்சியினை இற்றைநாளில்கூட கடலில் கலக்கும் ஆற்றுமுகப் பகுதிகளில் நிறைமதி நாட்களில் நேரிற் காணலாகும் எனவே. இந்நீராடுதல் என்பது முழுமதி நாளினைத் தொடர்ந்த நாளில் அமைந்திருத்தல் வேண்டும். அக்கருத்தை

'' விடியல் வந்த பெருநீர்க் காவிரி '' (அகம் 226)

என்ற பாடற் பகுதி விளக்கி நிற்கின்றது. இவ்வாறுடுதல் என்ற சங்க கால நிகழ்ச்சி பின் சிலம்பு காலத்தில் கடலாடுதல் என்ற முறையில் இந்திரவிழாவின் இறுதி நிகழ்ச்சியாகக்

கொண்டாடப் பெற்று இற்றையளவிலும் புகாரைச்சார்ந்துள்ள திருமுல்லைவாயில் போன்ற கடற்கரையூர்களில் 'சித்திரா பௌர்ணமி' எனப்படும் சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்த நாளில் கொண்டாடப்பெறுகின்றது.

இவ்வாறாடுதல் என்ற நிகழ்ச்சியில்தான் மன்னன் முதலியவர்கள்கூட கலந்துகொண்டு சிறப்பித்தார்கள் என்பதனைக் கரிகால்வளவன் கண்ட நீராட்டு விழாவினைப் பற்றிக் கூறும்

''ஒலிகதிர்க் கழனி கழார் முன்துறை
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண'' (அகம் 376)

என்ற பகுதி விளக்குவதோடு அக்காலத்தே தான் நீராடுதலில் வல்லவனாகிய அத்தி காவிரியின் 'விடியற்கால வெள்ளம் வடிதல்'' எனப்பட்ட நீர்விசையில் சிக்கி அடித்துச் செல்லப் பட்டான் என்பதனை

''புனனயந்தாடு மத்தி யணி நயந்து
காவிரிகொண்டு ஒளித்தாங்கு'' (அகம் 376)

என்ற பகுதி விளக்குகின்றது.

இத்தகைய சிறப்பான நிலையில்தான் கழார்த்துறை புகார்த் துறைக்கோர் அணிகலன் போன்றமைந்து, புகார் நாட்டிற்கும் சோணாட்டிற்கும் பெரும் புகழ் விளைத்து, அமைப்பிலழிந்தாலும், இலக்கியத்தால் அழியா நிலைக் காளாகி விளக்கம் பெற்று நிற்கின்றது

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'

K. சோமசுந்தரம். B. A., B. L., தஞ்சை.

முன்னிதழ்த் தொடர்ச்சி

இறையும் உயிரும் பிரிவற்றுள்ள அனுதி கலப்பினையுணர்த்தும் அத்துவிதத்தை புலனுக்கும் பூங்குன்றனுர், இப்பாட்டின்கண். உயிர் இறையாதற்கு ஏதுவாய், அவ்விரண்டிற்குமுளதாயதொடர்பின் சிறப்பினை விதந்தோதியுள்ளார். 'என்று நீ அன்று நான்' 'நீயென நானென வேறில்லை' என்பவை அத்துவித மெய் கண்ட தாயுமானவரின் மெய்ம்மொழிகள் அளவைக்கு எட்டப் படாத இறைவன். உடலுக்கு உயிர் ஒன்றே போன்று, உலகுக்கு ஒரு காரணனுகி எவையும் நல்கி, அனைத்தையும் இயற்றி உயிருக்குயிராயிருந்து ஒன்றினும் தோய்தலின்றி நிற்கும் தன்மையாய் உலகினை இயற்கை நியதியாகிய ஒழுங்கு முறையில் நடத்தும் சகுணன் இறையோடிருந்த உயிர்கள் ஓரோவழி இறைவனைப் பிரிந்து சென்ற ஞான்று பலதிறப்பிறவிகளைத் தாங்கி மக்கட் பிறவி எனும் உயர்நிலைக்கு எய்தி அந்நிலையில் அயராத அறிவு முயற்சியின் பயனுக இறை யுண்மையினை உணரும் இயல்புடையராய், இறையுடன் இரண்டறக் கலக்கும் பேற்றினை அவ்வுயிர்கள் பெறுதற்குரியன இத்தகையவாறு மனிதப் பிறவியை செந்நெறியில் படுத்தும் வாழ்வில் உளதாகும இன்பங்களை இனிதென மகிழ்தல் கூடாதென்பது பூங்குன்றனரது கருத்து மகிழ்ச்சியில் திளைத்து வாழுப்போது சூழ்நிலை காரணமாக செயலில் பல்வேறு தவறுகளும் கொடுமைகளும் நிகழ்தல் கூடுமாதலின், அதனுல் பல்வகைப் பிறவிகளையெடுத்து அல்லலுற்று பின்னர் விழுமிய மனிதப் பிறவியாகிய உயர் நிலையை அடைந்த உயிர் மீண்டும் கீழ்நிலைக்கு ஏக ஏதுவாகும். இதனைத் தடுக்கவே வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று' எனக் கணியனுர் இசைத்துள்ளார். மற்றும் வாழ்வு துன்பத் துயருறுங் காலை அதனை இன்னுதென்று வெறுத்து இகழ்ந்து இருத்தலும் கூடாது என்னெனில் அவ்வெறுப்பு நிலை மனத்தளவில் நின்று பின்னர் உள்ளத்திற்கும் உடலுக்கும் ஊறுசெய்யும் வகையில். அகப் பகையையும் புறப் பகையையும் ஒருங்கே வளர்த்து. உயர் நிலையினைப் பெறமுடியாதவாறு கருப்படும் உயிரைக் கீழ்நிலையில் புகுத்திவிடும். இதனுற்றுன் பூங்குன்றனுர் 'முனிவின், இன்னு தென்றலும் இலமே' எனச் செப்புவாராயினுர். வாழ்வில் நேரும் இன்ப துன்ப நிலைகளை ஒன்ருகக் கருதி மன அமைதியொடு

யுணரும் நிலை ஒருவருக்கு ஏற்படின், அன்னவருக்கு கொடுந் துயர் தரும் துன்பம் துன்பமாகத் தோன்றுவதில்லை துன்பங்கள் மக்களை வாழவைப்பதற்கே யல்லாது வீழவைப்பதற்கில்லை என்று தேற்றிக்கொள்ளும் துணிவு அன்னவர்பால் அரும்பிப் பிறக்குமாதலால், அவரது வாழ்வில் துன்பம் சிறிதும் ஏற்படுவதுமில்லை. மற்றும் மனம் தீயவினைகளில் ஈடுபடின், அதன் ஆற்றலும் குறைந்து கெடுமாதலான்: தீயவினைகளை இயற்ருதும், எதிர்பாராது வரும் துன்பத்தையும் பொருட்படுத்தாதும் மக்கள் இருத்தல் வேண்டும். இத்தகைய நிலையினை அடைவது அவரவர் மதியாற்றலைக்கொண்டு உணரும் திறத்தால்தான் அமைந்துள்ளதென்பதும். இன்பத்துக் காரணம் அவரவர் இயற்றும் நல்வினையே யென்பதையும் குறிப்பால் பூங்குன்றனர் தெளியவைத்துள்ளார். இதன் வழி வாழ்வில் துன்பம் செறிந்திருக்கிறது என்று நினைப்பவர்களைக் காட்டிலும் துன்பத்திலும் பர இன்பமுளதெனக் கருதி நல்வினைபுரிவோர் வாழ்வில் இறக்கங்காணுது ஏற்றம் கொள்வதும் கண்கூடு. இவ்வாற்ருல் புகழில் திகழும் அறிவுடையராகிய பூங்குன்றனர். மக்களது சிந்தனையைப் பெரிதும் கிளரத் தூண்டி, உணர்ச்சியை எழிலுற மலரச் செய்து. அன்னரது ஆற்றலை மிகுதிப் படுத்த.

'வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்ஞ தென்றலும் இலமே'

என்ற அடிகளான், மனதிற்கு அமைதியையும் இன்பத்தையும் அளிக்கும் வகை இறும்பூதற்பாலது மக்களின் மனம் அறிவின் வயப்பட்டு நிற்குமாயின் அதனைவிட மக்கள் பெறும் பேறு பிறிதில்லையென்று பூங்குன்றனர் குறிப்புபட புலப்படுத்தி, மக்கள் மனதிற்கு அடிமையாகாது நடக்கும் சிறந்த முறையை தனது பனுவலின்கண் விளங்க வைத்தது பாராட்டற்பால தொன்றேயாம்.

இத்தகையவாறு துன்பத்தை வெறுக்காது பொறுக்கும் பான்மையால், இன்புற்று வாழும் இயல்புடையார் என்றும் துன்புற்று வாழ்தல் அரிது எனக் கூறவந்த பூங்குன்றனர், விதியும், மதியும் ஒன்றுக்கொன்று முரணுகாதவாறு விளையாடும் பான்மையினையும் சுட்டிக்காட்டியுள்ளார், ஒருவர் இயற்றும் நன்மை தீமையாய காரியத்தின்படி அன்னவருக்குப் பலன் கிடைப்பது விதியெனவும், வலிமைகொண்ட விதிக்கு ஏற்ப

காலத்திற்குத் தக்கபடி, மதியும் செயலாற்றி, ஊசி சென்ற வழி நூல் போவது போன்று, விதியின் பின்னர் மதி தொடர்ந்து போவதால் விதிக்கும் மதிக்கும் முரணில்லையென்பதை கணியன் பூங்குன்றனார் குறிப்பால் உணர்த்தி, காலம், விதி, மதியின் செயல் ஆகிய மூன்றும் தொடர்புடையதாகக் காட்டியுள்ளார் இக்குறிப்பினை யுணரும் மதியுடையார் விதியின் இயற்கைச் சட்டத்திற்கு இணக்கமாகவே! காலத்தின் போக்கைக் கருதி சூழ் நிலைக்கேற்ப முன்னேற்பாட்டு எச்சரிக்கையுடன், கலங்காதும் திகைக்காதும் தன் மனத்தை மதியின் கற்பகத்தால் நேர்மைப் படுத்திக்கொள்வரென்பது பூங்குன்றனாரது கருத்து.

வினைப்பயனை துய்த்தொழிப்பது ஊழ் அல்லது முறை எனத் தெளியப்படவே, முன்பு செய்த நலவினை, தீய வினைகளின் பயனே விதியாக மூளக்கின்றதென்பது நலவினைமீதுள்ள விருப் பினையும் தீவினைபாலுள்ள வெறுப்பினையும் காட்டவல்ல உறுதி யாய நம்பிக்கை மக்களிடையே வழி வழியாக நிலவிவந்த மரபின் மூலம் பெறப்படும் இத்தகைய மரபு இலங்க, கணியனார் விதியும் மக்களுயிர்க்கு அப்பாலுள்ள தன்று என்றும், அறிவுக்கும் இயற் கைக்கும் ஊழ் முரணில்லை என்றும் புலப்படுத்தி, மக்களது உள் ளுணர்வை தெய்விகப் பொறியுடன் விளங்கும்படியாக, மக்களை 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டில் செயல் படுத்த ஊக்கவுரை வழங்கியுள்ளார், மற்றும் ஊழ்வினையின் வலி மையினை ஓர்ந்துணரத் தூண்டி நெறி வாழ்வைக் கடைப்பிடிக்க ஊக்கியுள்ளார் முன்செய்த தீவினையின் ஆற்றலையும் பயனையும் முறியடித்துத் தவிர்க்கவே, நல்வினையொடு உலையா முயற்சி இன்றியமையாததென விழிப்புறுத்துவார். சலியாத இம் முயற்சியில் தோன்றிய பழக்கங்கள் மக்களது வாழ்வில் பிழையாப் பெருந்துணையாக அமைந்து பின்னர் உலக வழக்காய் இயங்கி பயன்தரும் முறையில் வன்மை மேவி 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' எனும் கொள்கையினை உயிர்த்தன்மையாய் விளங்க வைப்பதாகும். இன்ப துன்பத்தை மக்களாற்றும் வினைகளுக் கேற்ப அளிப்பதே விதியின் தொழிலாதலால், மக்கள், அறிவு நிலை விளங்க அறநெறியின்கண் நின்று நல்வினைகளை மட்டும் மதி வலியால் உவந்து ஏதுநடை கடைப்பிடித்து, தாளாண்மை யொடு செயலாற்றி ஒழுகினால், விதிவலியால் ஏற்படும் தீய பயனை சிறிது தடுக்கவும் மட்டுப்படுத்தவும் இயலுமென்பதை, ஊழ்வலியில் பெருநம்பிக்கையுடைய பூங்குன்றனார் குறிப்பாகத் தெளியவைத்துள்ளார். எனவே, பூங்குன்றனார் ஊழைப்பற்றிக் கூறும் கருத்து ஆன்ற தமிழர்தம் பழங் கொள்கையாகுமென்க.

உயிர், இருவினைப் பயன், மறுபிறப்பு. சித்தாந்தப் புணர்ப்பு முதலாயவற்றை சமய நெறி கண்கொண்டு, ஆய்ந்து கூறுது, மன அமைதியினை அளித்தும், ஆன்ம வேட்கையினைத் தணித்தும், திகழும் நிறைவுடைய இறைஞான வுணர்வுக்குரிய பயிற்சியை மட்டும் குறிப்பால் வற்புறுத்தி. உலகியல் நிகழ்ச்சிகளுக்குரிய அறப் பயன்களையும் ஒழுக்க நெறிகளையும் அடிப்படையாகக் கொண்டு தெய்வ மணக்கும் தமிழ் மொழி சமயத்தையும் கடந்தது என்ற உணர்வு நிலவும்படி இப்பாட்டினைக் கணியனர் அமைத்துள்ள நயம் சிந்தித்து உணரற்பாலது.

அகப் பகையினையும் புறப் பகையினையும் அறவே போக்கி. நற்பண்பு வளர்க்கும் பூங்குன்றனர், நல்வாழ்வியலின் சுருதி முதற்பொருளினையும் போற்றியுள்ளார். வியனுலகம் மழையால் நிலைபெறுதலைக்கண்டு செல்வர், வறியர் எல்லோர்க்கும் எவ்வகையினருக்கும் தேவையாகிய நல்லொழுக்கம் மழையின்றியமையாது என்ற கருத்து கொண்டு. இறைமயமாய மழையைப் பற்றி கணியனர் புறப் பாட்டில் இயற்கை யுண்மை தோன்றுமாறு மொழிவாராயினர். தண்மை மிக்குடைய மழையை ஆருயிர்ச் செல்வமாகக் கருதிய கணியனர், அஃது உலகை உயிர்க்கும் பெருமை வாய்ந்து எவ்வுயிர்க்கும் வாழ்வு நல்குவதை. செய்யுளா றென்னும் புலனெறி வழக்கின்மூலம் பயனுறுதற்கு நெறி கோலிக் காட்டியுள்ளார். வானத்தில் கருக்கொண்ட மேகம் மின்னலை வெளிப்படுத்தி குளிர்த்துளிகளையுடைய மழையாகப் பொழிகிறது அம் மழைநீர் பெருவெள்ளமெனப் பெருகி மலையின் கல்லிடுக்குகளில் விழுந்தும் கற்களை யலைத்து கலித்துச் செல்லும் பெரிய ஆருகிவிடுகிறது இத்தகைய நீரோட்டத்தையும் வெள்ளத்தையும் பற்றிய காட்சியினை நெஞ்சில் மகிழ்ச்சி பொங்கும்படி, கவிவானில் விளங்கும் குன்றனர் தம் பாட்டில் குறிப்பிட்டு. மக்கள் வாழ்க்கை இயற்கை நலனுடையதாதலை,

"மின்னெடு
வானந் தண்டுளிதலைஇ ஆனது
கல்பொரு திரங்குமல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம்"

எனக் கலையுணர்வோடு ஏற்றுக்கொள்ளும் வகையில் விளங்க வைத்தார். இயற்கையின் உள்ளத்தில் இறைவனைக் காணும் ணியனர், மின்போல் யாவும் தோன்றி யழிவதால், என்றும்

அழியாதகாயுள்ளதை நாடுமாறு மின்னல் என்ற சொல்லின் மூலம் மென்மையாக உணர்த்தியுள்ளார் மற்றும் இறை. இயற்கை வாயிலாக வழுமுயிர்க்கு காட்சி நல்கி நலஞ்செய் வதை இறைவனது கருணை மழையால் அறிவுறுத்தியுள்ளார். பூங்குன்றனார் மழையின்றி அமையாத வாழ்வின் ஒழுக்கத்தின் மாண்பினை விளக்கி, நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கத்தின் வழி எய்தும் கேண்மையினையும், நல்லறமொடு செய்கின்ற வினைச் செயல்களில் திகழும் பொது நோக்கினையும் புகட்டி, நல்வாழ்வியலை அறிந்து வாழ்வது இறைவனுக்காகவேயென வலியுறுத்துவார்.

எவ்வாறு மழைக்கு ஆக்க வினையும், அழிக்கும் வினையும் வளமையோடிருக்கிறதோ. அஃதேபோன்று மண்ணுலகில் நன்மையும் தீமையுமுள்ளதென்றும். அவற்றை உயிர்கள் துய்ப்பது உலகை இயக்கும் நியதியாய ஊழின்பாற்பட்ட தென்றும். அவ்வுயிர்கள் யாவும் உயிர்ப்பேராற்று வெள்ளத்தில் இயக்கப்பெறும் மிதவைகளே போன்றுள்ளன என்று குன்றனார் கூறுவாராயினர். நீர்வழிப்பட்ட புணை அதன் வழி செலலாது மற்றென் செய்யும்! உயிரும் ஊழின் சீர்வழிப்பட்டதே! கட்டறுத்துப் பொங்கும் காட்டாற்றின் பெருகு நீரோட்டத்தில் எதிர்த்தேகாது அதன் வழி மிதந்தே செல்லும் மிதவைபோன்று அரிய உயிர் பெருவலியுடைய விதி வழியே செல்லும் இயற்கை யுடையதென்ற உண்மையினைச் சான்றோர் அறிவின்மூலமாகத் தெளிந்ததைக் குன்றனார், திருவினையாக்கும் முயற்சியை இகழும் நோக்கில்லாது உணர்த்துவாராயினர்.

தனித்து மிதக்கமாட்டாத இருவினைகளாலே கனமுள்ள உயிர்களைத் தன்மீது கொண்டுசெல்லும் திறத்தது மிதவை யாகும் இவ்வாறு இருவினைகளால் பருமைப் பொருளாய் விளங்கும் உயிர்கள் சுக்கானிலாத மிதவைகள்மீது செல்லும் போது ஒரே வழி உரிய கரையினைச் சேர்வதற்கு முன் நீரினுள் மூழ்கினாலும் மூழ்கும். அவ்வாறு உயிர்களுக்கு நேராதவாறு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அருளுணர்வு விளக்கும் மனப் பக்குவத்தைப் பெருக்கியே அளிக்கும் நன்னெஞ்சத்தையும் நல்லறத்தையும் படைத்துக்கொள்ளும் மெய்யன்புப் புணைகளிலே செல்லும் உயிர்கள், மெய்யறிவு வாய்ந்து, பிறவிச் சாகரத்தில் ஆழாது முத்திக் கரை சேர்ந்து இறைவனைச் சார்வது இயல்பு எனக் குன்றனார் திண்மையுடன் அறிவுறுத்தியுள்ளார் நன்னெறியில் நிறுத்தும் இத்தகைய அறிவுறூஉவை திறவோர் காட்சியில் தெளிந்தனம்' என்ற சொல்லருமையோடு குன்றனார்

நுவன்றது அவர் தம்மை அடக்கிக்கொள்ளும் அழகிய ஆத்மானுபவப் பண்பாட்டையும். யாவரையும் இனிது வாழ்விக்கவல்ல கலைநடம்புரியும் சொற்பழக்கத்தையும் எடுத்துக்காட்டா நிற்கும். இதனுன் பூங்குன்றனுர் ஆத்ம ஞானத்தை அழிக்கும் கர்ம வினைகளை வென்று உலகினையும் உலக வாழ்வினையும் உள்ளபடி உணர்த்தும் பெற்றியர் என்பது பெறப்படும். கால வெள்ளத்தை அமைதியாக எதிர்நீச்சலடித்து வரும் அறநெறிப் படகாக அமைந்துள்ள இப்பாட்டு இறைவன் மறைபொருளாக விளங்கும் மோன ஆற்றலை ஏந்திக்கொண்டு தரும் கவிதையின்டம், உவமையிலா இறையின்பங்கொண்டு தெளிந்த காலவுள்ளத்தில் வாழுந்தன்மை பெற்று இலங்குவதாகின்றது; மற்றும் இறையின் சகுண நிலையினைக் கண்டுகொண்டு தெய்வப் பெற்றி சிறக்க இறைபணிபுரிதலே வாழ்க்கைக்குரிய நோக்கம் என்பறை சாற்றுகின்றது.

பூங்குன்றனுர் இங்ஙனமாக வாழ்வின் சிற்பத்தை வடித்துக் காட்டி, வாழ்வறங்களைக் கடைப்பிடித்து மக்கள் நட்புரிமையோடு இன்பமாய் அன்புற்று வாழும் நன்னெறிகளைப் பின்பற்றினுல் தான், 'நெஞ்சத்து நல்லம் யாம்' என்ற அழகொடு யாவரும் கேளிர் என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கொள்கை மலர்ந்து பெருவழக்குடையதாய்ப் பயன்படும் என்று அறிவுறுத்தியுள்ளார் மற்றும் அணைகளைக் கட்டி பெருவெள்ளத்துப் பேராறுகளைப் பயன்படுத்துதல் போன்று, நல்வாழ்வுக் கலை, வழிதுறையின்றி வீணுகப் போகாதவாறு பயன்பட்டு பண்புநலம் பொலிவுடன் தழைத்தோங்கி நிற்க கணியனுர்

> பெரியோரை வியத்தலும் இலமே
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

என்ற அணைகளையும் ஆணைகளாக அமைத்துள்ளார், பண்பாட்டின் காவலராகிய பூங்குன்றனர், ஏற்றத் தாழ்ச்சிப் பிரிவுகள் வையகத்தாரது கற்பனை மயக்க மாதலான். அது மெய்யுணர்வால் மறையற்பாலதென்ற உண்மை நெறியை விதந்தோதியுள்ளார். 'நன்மையான் மிக்க பெரியாரை வியந்து மதித்துப் போற்றலு மிலேம், தீமை செய்த சிறியோரையும் புறக்கணித்துப் பழித்தல் அம் மதித்தலினுமிலேம்', எனக் கணியனுர் கூறி பல பொருட்டோற்றங்களைக் காட்டும் அனுபவ அறிவு நிலைக்குநிலை உயர்வு கொள்ளும் வண்ணம் 'அதனினும்' என்ற சொல்லிலே சுவையினை உணர்ந்து நாவூறஊற அமைத்த திறம் சுவையுணர்வில்லார்க்கும் மிக்க இன்பம் விளைவிப்பதாகும்

— தொடரும்

சென்ற இதழின் தொடர்ச்சி

தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்

பேராசிரியர் ச பாலசுந்தரம், கரந்தைப் புலவர் கல்லூரி.

ஆழ்ந்தகன்ற நுண்ணறிவினலே இந்நில உலகின் இயற்கையமைப்பு நோக்கிக் குறிஞ்சி முதலாக நானிலத்திற்கும் பெயரிட்டு வழங்கிய தென்னகச் சான்ரோர்கள் பாலேயொடு நானில வளனும் அமைந்து விளங்கும் இந்நிலப் பகுதிக்குக் கூர்த்த மதியோடு இட்டு வழங்கிய 'தமிழகம்' என்னும் நாட்டின் பெயரே இங்கு வழங்கும் மொழிக்கும் பெயராயமைந்துள தென்பதில் ஐயமில்லே. ஆயினும் இந்நிலப் பகுதியின் பெயர் தமிழகம் என இருக்க மொழிப் பெயர் மட்டும் ஈறு குறைந்து 'தமிழ்' என்னும் அளவில் நிற்பானேன்? தமிழகம் அல்லது தமிழகன், தமிழகி என்றன்ரே இருத்தல் வேண்டும், என்பார்க்குத் தமிழகம் என்னும் இத்தொகைமொழியுள் அகம் என்பது இடத்தைக் குறிக்கும் பொதுப் பெயர்ச்சொல். 'தமிழ்' என்பதே சிறப்புப் பெயர், ஆகவே தமிழ் என்பதுதான் நாட்டின் பெயர் என எளிதின் விடையிறுக்கலாம். அங்ஙனம் செப்பின் சீனு - சீனம், செருமனி - செருமானியம், பீஹார் - பீஹாரி, காசுமீரம் காசுமீரி என்ருற்போல ஈறு திரிந்து தமிழி அல்லது தமிழு. தமிழோ என்றன்ரே அமைதல்வேண்டு மெனின் இரசியா - இரசியா, வங்காளம் - வங்காளம் என்ருற் போல ஈறு திரியாமலேயே அமைந்துளது எனலாம்; இவ்வாறு கூறின் தமிழ் என்னும் மொழிப் பெயரே நாட்டுப் பெயராக அமைந்துளது எனக்கொண்டால் என்னே? என வினவுவார்க்கு விடை கூறல் இடர்ப்பாடாகுமெனின், ஆகாது, உண்மையாக நோக்கின் இச்சொல் ஒருகால எல்லேக்கண் தமியேழம் என்றும் பின்னர்ப் படிப்படியாகத் தமேழம், தமிழம் என்று குறைந்து இறுதியாகத் 'தமிழ்' என்ற வடிவில் நிலேபெற்றுள்ளமையைப் பின்வரும் சான்றுகளால் உணரலாம்.

தமிழ், ★தமிழம் தமேழம், தமியேழம் என்னும் இச்சொற்கள் யாவும் 'தமிழகம்' என மருவி நிற்கும் இத் தொகைமொழியினின்றும் பிறந்த மரூஉச் சொற்களேயாம், ஆதலின் இந்நாட்டிற்குத் தமிழகம் எனப் பெயரமைந்த காரணத்தை ஆய்ந்தறியும்போது இது தெளிவாகும். எனவே இந்நாட்டிற்குத் தமிழகம் எனப் பெயரமைந்த காரணத்தை இனி நோக்குவோம்

★ தமிழகம் என்பது தமிழம் என வருதல் முறையே என்பதைக் கீழ்வரும் சொற்களின் வாயிலாக உணரலாம், குன்றகம் -

தமிழகம், தமிழ் என்னும் பெயர்க் காரணங்கள்பற்றி இது காறும் வெளிவந்துள்ள அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கண்டு மேலே செல்வது தெளிவு பயக்குமாதலின் முதற்கண் அவற்றைக் காண்போம்.

'தமிழகம்' என்னும் பெயர்பற்றி முன்னைய அறிஞர்களின் கருத்துக்கள் :

சிலர் இந்நாட்டின் பெயர் திராவிடம் என்ப, அஃதாவது திராவிடம் என்னும் சமற்கிருதச் சொல் படிப்படியாகத் திரிந்து தமிழ் என மருவிற்று என்றும் அம்மொழிப் பெயரே நாட்டிற்கும்

குன்றம் - குன்னம் என்றும், மன்றகம் - மன்றம் என்றும், மலையகம் - மலையம் - மலயம் என்றும் வருதல் மரபேயாம். 'அகம்' என்பது இடைக்குறையாய் 'அம்' என நிற்கும் இந்த 'அம்' என்பதனைச் சாரியை இடைச்சொல்லாகவும், விகுதியிடைச் சொல்லாகவும் வைத்து இலக்கண நூலார் கூறுவர். இந்த 'அம்' என்பது குன்றம் மன்றம் என்றாற்போல இடப்பெயர் விகுதியாகவும், நலம், வலம் என்றாற்போலப் பண்புப் பெயர் விகுதியாகவும், வருத்தம், பொருத்தம் எனத் தொழிற் சொல்லோடு கூடித் தொழிற்றன்மையைக் குறிக்கும் விகுதியாகவும் வரும், மேலும் இந்த அகம் என்னும் பெயர்ச்சொல் 'அம்' என்னும் இடைச்சொல்லளவில் சுருங்கி வருதலேயன்றி மேலும் அதன கண் உள்ள மகரம் கெட்டு 'அ' என்னும் அளவில் நின்று 'அம்' (அகம்) என்னும் பொருளிலேயே சில சொற்களில் இணைந்துவரும். எ-டு: மன்றப் பெண்ணை, குன்றக்கூகை, தமிழப் பிள்ளை என்பவற்றுள் அகரம் ஏழாம் வேற்றுமை இடப் பொருளில் நிற்றலைக் காணலாம். இவ் அகரம் அம் என்பதன் குறையென்று கொள்ளாமல் 'அக்கு' என்பதன் குறையெனக் கருதினர் இலக்கண நூலார். இவ்வாறே ஆறன் பொருளில் வரும் அரசக்கன்னி, பார்ப்பனக் குழவி என்பவற்றுள் நிற்கும் அகரத்தை இறுதி கெட்ட 'அது' உருபெனக் கொள்ளாமல் அல்வழிப் புணர்ச்சியெனக் கொண்டு அக்குச்சாரியை பெற்றதென்று அமைத்தனர். இவ்வாறே தாழக்கோல் என்பது இரு கதவுகளையும் தம்முள் தழுவச்செய்யும் செயலுடையது என்னும் பொருளில் இரண்டாவதன்கண் ஆருவது மயங்கியுள்ளமை நுணுகி நோக்கியறியலாம் இதனைத் தாழைத் திறக்கும் கோல் எனவும் தாழாகிய கோல் எனவும் உரையாசிரியன்மார் தத்தமக்கு வேண்டியாங்கு உரைத்தனர். தாழ் என்பது தழுவு, தழூஉ என்னும் வினைச் சொல்லின் திரிபாகும் என்க

நாட்டில் வாழும் மக்களுக்கும் பெயரா யமைந்ததென்றும், கூறுப திராவிடர் என்னும் மக்களினப் பெயரே நாட்டிற்கும் பின் மொழிக்கும் அமைந்ததெனக் கொள்ளினும் கொள்ளலாம் என்றும், எவ்வாறுயினும் திராவிடம் என்ற சொல்லே தமிழ் ஆயிற்று என்பதே முடிவு என்றும் அவர் கூறுப. அவர்தாமும் திராவிடம் என்னும் இச் சமற்கிருதச் சொல்லின் பொருள் விளக்கம்பற்றி யாதும் கூறினாரில்லை. இக் கருத்தினை இந் நாட்டிலும் அயல்நாட்டிலும் ஒப்பியுள்ள அறிஞர் சிலர். ஒப்பாதார் சிலர். ஒப்பாதவருள் ஒரு சாரார் இம்மொழிப் பெயர்க்கு ''இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'' என்னும் காரணத்தையும், தமிழ் மொழி மிகத் தொன்மையானது ஆரியர் வருகைக்கு முன்பே தென்னகத்தில் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள் சிறந்த நாகரிகமும் பண்பாடும் உடையவராய் மொழி வளர்க்கக் கழகங்களைக் கண்டு இயல், இசை, நாடகம் என்னும் முப்பகுதிகளிலும் அளவிறந்த நூல்களை ஆக்கியளித்துள்ளனர். அன்னவர் தம் தாய்மொழியைச் சுட்ட ஒரு பெயரிட்டுக் கொள்ளாமல் பின் வந்த ஆரியர்கள் இட்ட பெயரை ஏற்று வழங்கினர் எனல் வரலாற்று முரண் என்னும் ஏதுவையும் காட்டி மறுப்பர் மற்றொரு சாரார் 'தமிழ்' என்னும் சொல்லே படிப்படியாகத் திரிந்து வடமொழியில் திராவிடம் என இடம் பெற்றிருக்க வேண்டும் என்று பட்டிமன்ற முறைமையில் மறுப்பர். இவ் இருசாராரும் தமிழ் என்னும் பெயர் எவ்வா றமைந்ததென்பதுபற்றி யாதொன்றும் கூறினாரில்லை எனவே இச் சொற்பெயர்க் காரணத்தை ஆய்வதற்கு முன் ''திராவிடமே தமிழாயிற்று — இல்லை - தமிழே திராவிடமாயிற்று'' என்னும் இச் சிக்கலினின்றும் தெளிவடைய வேண்டியது கடப்பா டாகின்றது.

முதற்கண் திராவிடம் என்னும் சொல்லே தமிழ் எனத் திரிந்ததென்பார் கூற்றை ஆய்வோம். இக் கொள்கையை வலியுறுத்தியவர் கால்டுவெல் அவர்கள் ஆவார். அதற்கு அவர் கொண்ட சான்றுகள் வடமொழி நூல்களும், மேலைநாட்டவர் எழுதியுள்ள சில குறிப்புக்களுமேயாம். தமிழில் திவாகரம் முதலிய நிகண்டுநூல்கள் தவிரப் பிற இலக்கிய இலக்கண நூல்களி னின்றும் யாதொன்றும் இல்லை. அவர் தமிழ் மொழியை ஆய முற்பட்டபொழுது அவருக்குத் தொல்காப்பியமும் சங்க இலக் கியங்களுள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் கிட்டவில்லை. அவற்றை அவர் கண்டிருக்கவில்லை என்பதே அறிஞர் பலரின் கருத்தாகும். மேலும் தமிழ் மொழியில் கி பி பத்தாம் நூற் றுண்டுக்குமுன் எழுத்து வடிவில் இலக்கியங்கள் தோன்றவில்லை.

திருக்குறள், நன்னூல் முதலியவை பத்தாம் நூற்றுண்டிற்குப் பின் எழுந்தவையேயாம் என்பது அவர்தம் ஆராய்ச்சி முடிபு. இந்நிலையில் அவர் ஆராய எடுத்துக்கொண்டதோ திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். அதற்கு இயைபாகவேண்டும் ஒரு சில சொற்களுக்குமட்டும் சொற்பெயர்க் காரணம் காண்பது அவர்க்குக் கடப்பாடாயிற்று, அவற்றுள் தலையாயது தமிழ். வடமொழியுள் தமிழைக் குறித்து வழங்கும் சொல் திராவிடம் என்பது, எனவே இவ் இரண்டு சொற்களும் ஒரு பொருளையே சுட்டுதலின் ஒன்றிலிருந்துதான் மற்றொன்று தோன்றியிருக்க வேண்டுமென்று கருதிக்கொண்ட அவர், கி. மு நான்கைந்து நூற்றுண்டுகட்கு முன் செப்பமடைந்தது வடமொழி. கி. பி, பத்தாம் நூற்றுண்டளவில் இலக்கிய வடிவம் பெற்றது தமிழ் மொழி ஆகவே வடமொழியிலிருந்துதான் இப்பெயர் வந்திருத்தல் வேண்டும் அஃதாவது ஆரியரிட்டு வழங்கிய திராவிடம் என்னும் சொல்லின் சிதைவையே தமிழர் பெற்றுக்கொண்டன ராதல் வேண்டும், எனக்கொண்டு திராவிடம் என்னும் பெயரே நாட்டின் பெயரும் மக்களினத்தின் பெயருமாயிற்று. என வரையறை செய்துகொண்டார். மொழியின் பெயரால் மக்களுக்கும் நாட்டிற்கும் பெயரமைவது வரலாற்றுமுரண் என்பது மேலே விளக்கப்பெற்றது. மேலும் இப்பெரியார் சேர, சோழ பாண்டியர் முதலிய பெயர்களும் வடமொழியினின்றும் திரிந்தனவே எனக் கூறியுள்ளார் (இச்சொற்களின் உண்மைப்பொருளை அவ்வச் சொற்களை ஆராய்வுழிக் காண்போம்.)

வடமொழியில் முதற் காவியம் எனப்படும் வான்மீகி இராமாயணத்திலும். மனு நூலிலும். வியாசபாரதத்திலும். ஐதிரேயப் பிராமணத்திலும், வடமொழிப் பாகவதத்திலும் திராவிடம். திராவிடி என்னும் சொற்கள் காணப்படுகின்றன பின்னர் எட்டாம் நூற்றுண்டளவில் வாழ்ந்த வடமொழிப் புலவராகிய குமாரிலப்பட்டர் 'ஆந்திர திராவிட பாஷா' என்ற தொடரையும் அக்கால எல்லையில் விளங்கிய முதற் சங்கராச்சாரியார் முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தரைக் குறித்துத் "திராவிட சிசு" என்ற தொடரையும் வழங்கியுள்ளனர். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதலிய அருள் நூல்களைப் பின்வந்த உரையாசிரியர்கள் திராவிட வேதமென்றும் அவை பற்றிய விளக்க நூல்களைத் திராவிட உபநிடதம் என்றும் வழங்கியுள்ளனர். சிவஞான போதம் முதலிய சைவ சமய சாத்திரங்களின் கருத்தை விளக்கத் தாம் எழுதிய விளக்கநூலைத் திராவிட மாபாடியம் என்று வழங்கியுள்ளார் சிவஞானமுனிவர். "வட

மொழியிலே வல்லான் ஒருவன்வரின் திராவிடத்திலே வந்ததாக விவகரிப்பேன்'' என்பது போலத் தாயுமானவர் முதலிய சான்றோர்கள் பேசியுள்ளனர். இவர்கள் எல்லோரும் இச்சொல்லைத் தமிழ் மொழி என்னும் பொருளிலேயே வழங்கியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

வடமொழிவாணர்களும் இப்பொருளிற்றான் வழங்கியுள்ளனர் எனினும் அவர்கள் இதனைத் தமிழ் என்பதன் திரிபாகவோ அல்லது பெயரின்றிக் கிடந்தமை கருதி இத்தென்மொழிக்கு இப்பெயரை இடுகுறியாக இட்டோ வழங்கினர் எனக் கருதுதல் சாலாது. என்னை? எப்பொருளாயினும் ஒரு பொருளை மக்கள் பயன்படுத்தத் தொடங்கினுல் அப்பொழுதே அப்பொருளுக்கு ஏதேனும் ஒரு குறியீடு செய்து கொள்வர். அவ்வாறின்றி 'ஒரு மகனைப் பெற்ற பெற்றோர் தன் மகனை அழைத்து மகிழ ஒரு பெயரிடாமல் அவன் வளர்ந்து சிறப்புற்றிருக்குங்காலை அவனுக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தியாக வந்த ஒரு பெண்ணைப் பெற்றோர், தாம் அந்த மாப்பிள்ளைக்குப் பெயரிட்டழைத்தனர்' என்று கூறுவது போன்றே வடமொழியாளர் இத்தென்மொழியைச் சுட்டி வழங்குவதற்கு முன் இதற்கு ஒரு பெயர் அமைந்திருக்கவில்லை எனக் கருதுதலும் நகைப்பிற்கிடமாகும். [ஒரு பொருளுக்கு முன் ஒரு பெயர் இருந்து பின் ஒரு பெயர் வரலாம் பின் வந்த பெயரே வழங்கிச் சிறக்கலாம் எனினும் முன் ஒரு பெயரிருந்தது என்பதை மறுத்தற்கியலாது; அது போலக் கூறுதற்கும் ஈண்டு எந்த அறிஞர்களும் வாய்ப்பளிக்கவில்லை] என்க.

இனி ''தமிழ் என்னும் சொல்லை வடமொழியாளர் திராவிடம் எனத் திரித்துக் கொண்டனர், ஏனெனின் வடமொழியில் ழகரமாகிய சிறப்பொலி யெழுத்தின்மையின்'' என்பார் கூற்றும் விதண்டையானதேயாம். தமிழைத் திராவிடமெனத் திரித்துக் கொண்டிருப்பாராயின் முதற்கண் 'தமிள்' அல்லது 'தமில்' எனத் திரித்துப் படிப்படியாகத் தமிளம் திமிளம், திரமிளம். திரவிளம் திரவிடம், திராவிடம் எனத் திரித்துக் கொண்டிருக்க வேண்டும் திரிபுகள் இம்முறையில் நிகழ்வதுதான் இயல்பும் முறையுமாகும். அவ்வாறாயின் திராவிடம் என்னும் சொல்லாட்சி முன்னர்த் திரவிடம், திரமிளம், தமிளம். தமிள் என்னும் ஆட்சிகள் படிப்படியாகக் காலத்தால் முற்பட்ட வடமொழி நூல்களுள் காணப் பெறல் வேண்டும், அவ்வாறு காணப் பெறுமலயோடு வடமொழி நூல்கள் எல்லாவற்றினும் திராவிடம் என்னும் வடிவிலேயே இச்சொல் காணப்படுகிறது. தமிளோ,

தமிரிசி, தெசிமோலோ முதலிய உருவங்கள் கிரேக்கம், சீனம் முதலிய அயல்மொழிகளிற்றான் காணப்படுகின்றன. இவ்வுருவங்களுள் ஒன்றேனும் வடமொழியிற் காணப்பெறுமையின் தமிழின் திரிபே திராவிடம் என்று கொள்வதற்கு எவ்வாற்றானும் இயைபில்லை. எனவே ஒன்று மற்றொன்றின் திரிபு என்னும் கொள்கை பொருந்தவில்லை.

ஆகவே தமிழ் என்பதும் திராவிடம் என்பதும் வெவ்வேறாய இரண்டு சொற்களே என்பது தெளிவாகின்றது. வடவர்கள் முதற்கண் தென்னாட்டைத் (தமிழகத்தை) தான் திராவிடம் என்னும் காரணப் பெயரால் வழங்க முற்பட்டனர். அம்முறையில் தென்னாட்டவர் திராவிடர் என்றும் அவர் தம் மொழி திராவிடம் என்றும் வழங்கப்பெற்றுள்ளன என்பதே வரலாற்று முறைக்கும் மொழியாக்க மரபிற்கும் பொருந்துவதாகின்றது.

பாரத நாட்டை வந்தேறியவர்கள் இந்தியா எனச் சுட்டி வழங்கியமைகொண்டு இந்தியா என்னும் சொல்லே பாரதம் எனத் திரிந்தது என்று கூறுவது எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தமே திராவிடம் என்பது தமிழ் எனத் திரிந்த தென்பதும் என்க இவ்வெடுத்துக்காட்டிலுள்ள இடர்ப்பாடுயாதெனின் இந்தியா என்பதும் பாரதம் என்பதும் ஒரு பொருளையே சுட்டும் இருவேறு சொற்கள் என உணர்தற்குரிய தெளிவான சான்றுகள் பல உள. திராவிடம் என்பதும் தமிழ் என்பதும் ஒரு பொருளையே சுட்டும் இருவேறு சொற்கள் என உணர்வதற்குரிய சான்றுகள் இப்பொழுது தெளிவாகக் கிட்டாமையேயாம்.

இனி வடமொழியாளர் தவிரப் பிறமொழியாளர்களுள் ஐரோப்பியர் "தமிழை' தமில், தாமில் — தமுள்" என்றும் டச்சுக்காரர்கள் தமிளோ' என்றும் சீனர்கள் தெசிமோலோ என்றும் கிரேக்கர்கள் 'தமிரிசி' என்றும் வழங்கியுள்ளனர். இவையாவும் அவரவர் தம் மொழி யொலிக்கேற்ப உச்சரித்த "தமிழ்" என்னும் சொல்லின் திரிபுகளே என்பது தெளிவாம்

— தொடரும்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சென்னையில் உள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் பேராசிரியர், டாக்டர் திருமதி இந்திரா சோமசுந்தரம் எம். ஏ., எம் லிட்., பி. எச். டி அவர்கள் மணிவாசகர் அருளிய திருவாசகம் பற்றி ஆராய்ந்து நூல் எழுதியுள்ளார் திருவாசக ஆராய்ச்சி என்னும் தலைப்பில் நூல் எழுதிப் பண்டாரகர் பெற்ற அவரைப் போற்றிப் பாராட்டுகின்றோம் தமிழறிவு சான்ற திருமரபில் தோன்றி அருந்தமிழ் மொழிக்குப் பெரும் பணி புரிந்துவரும் அம்மையார் தம் தொண்டு சிறக்க வாழ்த்து கின்றோம்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேரா சிரியராய் பணியாற்றும் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு எம். ஏ., எம். லிட், அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் திருக் குறள் ஆராய்ச்சி விரிவுரையாளராக இருந்தபோது எழுதி வெளியிட்ட 'திருக்குறள் நீதி இலக்கியம்' என்னும் நூலுக்கு இவ் வாண்டு சாகித்திய அகாடமி பரிசு வழங்கப்பெற்றுளது அதற் காக மிகவும் மகிழ்ந்து பாராட்டுகின்றோம் பல்துறை அறிவும் மல்கப் பெற்ற பேராசிரியர் அவர்களின் தமிழ் ஆய்வுப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

திருமதி இந்திரா சோமசுந்தரம், திருமிகு க. த. திருநாவுக் கரசு ஆகிய இருவர்க்கும் 15—1—1975 அன்று சென்னை நக்கீரர் கழகச் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பெற்றது பாராட்டுக் குரியவர்களைப் பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டும் பழக்கமுடைய நக்கீரர் கழகத்தாரையும் போற்றி வாழ்த்து கின்றோம்.